**Vol. 6, Issue – 2** **Pg. No. 19 - 34**

புதிய அவையம்

மின்னிதழ்

ISSN : 2456-821X

SACRED HEART RESEARCH PUBLICATIONS

# புனிதப் பண்பாட்டுத் தேசிய உருவாக்க பின்புலமும் அதன் பரிமாணமும் : ஷம்பாலா நாவலை முன்வைத்து

**முனைவர் ஆ.சந்திரன்**

உதவிப் பேராசிரியர்,
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர் மாவட்டம்,
Chandiranacn@gmail.com

==============================================================

## முன்னுரை

பண்பாடு, புனிதம், தேசியம் என்ற சொல்லாடல்கள் இன்றைய அரசியல் தளத்தில் மிகவும் பேசுபொருளாக மாறியுள்ளன. அத்துடன், அவை தனிமனிதனின் அடிப்படை நடத்தைகள் முதல் உணவு, உடை முதலான தேவைகள் வரை ஆதிக்கத்தைச் செலுத்தத் தொடங்கியுள்ளன. மதம், இனம், மொழி, பண்பாடு போன்ற வேற்றுமைகள் அல்லது பன்முகத்தன்மைகள் கொண்ட மக்கள் கூட்டத்தை ஒருங்கிணைத்த (இந்தியா) ஒரு தேசமாக ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்றது என்பது உண்மையாக இருந்தாலும், அதன் அடிக்கட்டுமானம் என்பது மிகவும் பலவீனமாகவே இருக்கிறது என்பதைச் சமீபத்திய தொடர் உரையாடல்கள், அரசியல் முன்னெடுப்புக்கள் நமக்கு உணர்த்திக் கொண்டுள்ளன.

*அதாவது, ஒரே நாடு. ஒரே மொழி. ஒரே பண்பாடு என்ற ஒற்றைக் குரல் ஒலிக்கத் துவங்கியுள்ளதிலிருந்து இதை நன்கு விளங்கிக்கொள்ளலாம். சமஸ்கிரத மொழியால் கட்டமைக்கப்பட்ட வைதீகப் பண்பாட்டை இந்திய நிலப்பரப்பின் பன்முக பண்பாடுகளைக் கொண்ட பண்பாட்டின் ஒற்றை வடிவமாக முன்னெடுக்கும் அபத்தம் இன்று அதிகாரத்தின் மூலம் திணிக்கப்படுகிறது. 'இந்துப் பாசிசம்' என்று இன்று கடுமையாக விமர்சிக்கப்படும் அந்தச் சமஸ்கிருதப் பண்பாட்டை அதன் தாக்குதல் முறைமைகளை நாம் வரலாற்று நெடுகிலும் மிக நீண்ட காலமாகவே சந்தித்து வருகிற ஒன்றுதான் என்பதை நாம் மீண்டும் நினைவு கொள்ள வேண்டிய தருணம் இது.*

*இந்துப் பாசிசம் என்றழைக்கப்படும் சமஸ்கிருதப் பண்பாட்டை அதன் அதிகார சக்திகளின் அடக்குமுறைகளை எதிர்த்து பலர் (இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும்) குரலெழுப்பி வருகின்றனர். அவர்களில் மிகத் தீவிரமாக செயல்படுபவர்கள் கொல்லப்படுகின்றனர் அல்லது அவர்கள் மீது கடுமையான வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன அல்லது அவர்கள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றனர். பன்முகப் பண்பாடுகள் காக்கப்பட வேண்டும் என்றும், அடித்தட்டு மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்றும், இயற்கைச் சூழலைச் சரி செய்ய வேண்டும் என்றும் நீளும் சமூக ஆர்வலர்களின் குரல்கள் தொடர்ந்து இந்தப் பாசிச சக்திகளால் நசுக்கப்படுகின்றன. இந்தப் பின்னணியில்தான் நாம் ஷம்பாலா நாவலை அணுக வேண்டியுள்ளது.*

**புனிதப் பண்பாட்டுத் தேசிய உருவாக்க பின்புலமும் - ஷம்பாலா நாவலும்**

*நாவலானது அமர்நாத் என்ற மையப் பாத்திரத்தை வைத்துக்கொண்டு அமைந்திருந்தாலும், அதன் போக்கு என்பது ஆங்கில எழுத்தான Y வடிவில் அமைந்துள்ளது. அதாவது, ஒரு மையம் அந்த மையத்தில் (முதல் இயல்) இருந்து இரண்டு (2, 4, 6, 8, 10, 12, 14 என்றும் 3, 5, 7, 9, 11, 13, என்றும்) இணைகோடுகள். அந்த இணை கோடுகளின் ஒரு பகுதி புனிதப்படுத்தப்பட்ட பண்பாடு எவ்வாறு உருவாக்கம் பெறுகிறது என்பதைச் சுற்றி கதையாடுகிறது. மற்றொரு பகுதி அவ்வாறு உருவாகும் கொள்ளும் அதன் பரிமாணம் எவ்வாறு ஆளுமையை செலுத்த தொடர்ந்து முயல்கிறது என்பதாக அமைகிறது. இறுதியாக15 ஆம் இயலில் மீண்டும் அவை இணைகின்றன.*

*ஷம்பாலா ஓர் அரசியல் நாவல் என்ற அப்பட்டமான நிலையில் வெளியிடப்பட்டு இருந்தாலும் இதில் சொல்லப்படும் அரசியல் என்பது தொடர்ச்சியற்றதாகவும், வரலாற்று நிகழ்வுகளை துணுக்குகளாக ஆங்காங்கே கலைத்து போட்டு எழுதப்பட்டு இருப்பதாகவும் கவனிக்க முடிகிறது. அதாவது, ஜமாலன் கூறுவதுபோல இந்நாவலில் வரலாறு ஆனது 'ஜல்லி வேர்களை போல் கிடைத்த இடத்தில் முளைத்து கிளை விடும் தன்மை கொண்டதாக' (ப.181) உள்ளது.*

*மேலும் ஒருபுறம் அறிவாளி,மென்மைத் தன்மை கொண்டவர், நேர்மையானவர் என்று அமர்நாத் சித்தரிக்கப்படுவதும், மறுபுறம் முட்டாள், மூர்க்கத்தனம் கொண்டவன் (உடும்பு, புலி, சிங்கம் முதலிய காட்டு விலங்குகள் போன்ற மனம் படைத்தவன்), அயோக்கியன், புதிரானவன், நம்பிக்கையற்றவன் ஹிட்லர்*

*என்பவனாகச் சித்தரிக்கப்படுவதும் கவனிக்கத்தக்கன. இவ்வாறு எதிரெதிர் பண்புகளைக் கொண்டவர்களாகச் சமகால மனிதர்களின் நினைவுகளின் பிரதிகளாகக் கொண்டு அமைந்ததுள்ளது இந்த நாவல்.*

*நாவலின் தொடக்கத்தில் சமூக மாற்றம் குறித்த சிந்தனை கொண்டவர் என்ற அடையாளங்களோடு இருக்கும் அமர்நாத் என்ற எழுத்தாளரைத் தேடி கைது செய்யும் எண்ணத்துடன் சிந்தனை போலீசார் வரும்போது, 'அவர் படித்துக்கொண்டு இருந்த ஆங்கில நாளேடு திறந்தபடி கிடந்தது. அதில் தேதி தெரியாவிட்டாலும் ஆண்டு தெரிந்தது. அது இந்திய அரசியலில் பல மாற்றங்கள் எல்லோருக்கும் வெளிப்படையாகத் தெரிந்த இரண்டாயிரத்தி பதினெட்டு' (ப.10) என்ற குறிப்பு செல்லப்படுகிறது. மேலும், அவ்வாறு வரும் காவலர்கள் கொண்டு வந்த கடிதைப் பார்த்து எந்த மொழியில் எழுதப்பட்டது என்று அமர்நாத் கேட்டபோது, ' ''எங்களுக்கும் தெரியாது'' இரண்டு போலீஸ்காரர்களும் ஒரே குரலில்' (ப.10) பதில் சொன்னார்கள் என்பதாக கூறப்படுகிறது. இந்தக் குறிப்புகளுடன், சிந்தனை போலீசைக் கண்ட அமர்நாத் 'என்ன விஷயம்? என் குழந்தை இப்போதுதான் வீட்டிலிருந்து பள்ளிக்குப் புறப்பட்டாள்' (ப.9) என்று பதட்டத்துடன் கூறினார் என்ற குறிப்பையும் இணைத்துப் பார்க்க வேண்டியுள்ளது. இவ்வாறு இந்த முக்கோண வடிவிலான புள்ளிகளை நாம் ஒன்றிணைத்துப் பார்க்கிற பொழுது அவை ஒரு நீண்ட வரலாற்றின் தொடர் கதையாடலை வாசகராகிய நம்மிடம் கொண்டு வந்து சேர்ப்பதை உணரமுடிகிறது.*

*அது நம்மை இந்த மண்ணில் மிக நீண்டகாலமாக இருந்து வரும் பண்பாடு என்ற ஒன்றினால் கட்டப்பட்ட அதிகார மையத்தினை அதனுடைய வரலாற்றை நோக்கி பயணிக்க வைக்கிறது. அதாவது, இறந்தகாலம் எதிர்காலம் என்ற இரண்டு கால இடைவெளிகளை மனதில் வைத்துக் கொண்டு நிகழ்காலத்தில் இந்தக் கதையாடல் என்பது நிகழ்கிறது. இந்த கதையாடலில் இருந்து நாம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தொடர்ந்து இந்த மண்ணில் நிலை கொண்டுள்ள ஆதிக்க மனப்பான்மையின் வெளிப்பாடுகளையும் அவற்றிற்கெதிராக அவ்வப்போது கிளர்ந்தெழுந்த போராட்டங்களையும் நினைவுபடுத்துவதாக உள்ளது. மேல் x கீழ் என்ற படிநிலை. அந்த படிநிலையின் தொடர்ச்சியான இயங்கு தளத்தின் மீதான ஓர் எதிர்வினை 1818 இல் நிகழ்கிறது. அதுதான் பேஷ்வா படைக்கும் தலித் பழங்குடி சார்ந்த மஹர் பழங்குடி மகளுக்கும் இடையிலான போர். அந்தப் போரின் தொடர்ச்சியாகப் புனிதப்படுத்தப்பட்ட பண்பாட்டின் இயங்குதளத்தை அதனுடைய அதிகார மையத்தை அடையாளம் காண வேண்டியுள்ளது.*

*அந்த இயங்குதளத்தின் எதிர்வினை போன்றவற்றின் முக்கியமான தொடர்புடையவராக வடக்கில் மராட்டிய சிவாஜியின் வரலாற்றினையும் நாம் மேலும் பின்னோக்கி பார்க்க வேண்டியிருக்கிறது. கி.பி.1674 இல் மராட்டியப் பேரரசின் மன்னராக சிவாஜி முடிசூட்டிக்கொண்டார். ஏறத்தாழ 370 போர்களில் வென்று தனது வீரத்தைப் புரியவைத்தவர் சிவாஜி. மாபெரும் வீரனாக இருந்தாலும், பார்ப்பனர்களுக்குப் பெரும் அடிமையாகவே இருந்தார். போர் வீரனாகவே வாழ்ந்து வந்த சிவாஜி, தனது ஆட்சியைத் தனது பார்ப்பன குரு இராமதாசுக்குச் சமர்ப்பணம்*

செய்துவிட்டு, அடுத்தடுத்த போர்க்களங்களை நோக்கிச்சென்று கொண்டிருந்தார். அவரது போராட்டக் காலங்களில், மராட்டிய அரச நிர்வாகம் முழுக்க முழுக்கப் பார்ப்பனர்கள் ஆதிக்கத்தில் இருந்தது. போராடிக் கொண்டிருந்த சிவாஜி, கொஞ்சம் நிதானித்து, தான் மன்னராகப் பட்டம் ஏற்க வேண்டும் என நினைத்தார். அதுவரை தலைமை நிர்வாகிகளாக இருந்த அவரது குரு இராமதாஸ் உட்பட அனைத்துப் பார்ப்பனர்களும் அதைக் கடுமையாக எதிர்த்தனர். இந்துமத வேதங்களின் படியும், சாஸ்திரங்களின் படியும் சூத்திரனான சிவாஜிக்கு மன்னராக முடிசூட்டிக் கொள்ளத் தகுதி இல்லை என்று மறுத்தனர். அவர்களின் எதிர்ப்பை மீறி உத்திரப் பிரதேசம் பகுதியிலிருந்து காகப்பட்டர் என்ற பார்ப்பனரை அழைத்து, பட்டமேற்க முடிவு செய்தார் சிவாஜி. காகப்பட்டரும் மனுசாஸ்திரப்படி சிவாஜி பட்டம் ஏற்க முடியாது என்றே கூறினார். ஆனால், அதற்குப் பிராயச்சித்தமாக 50 ஆயிரம் பார்ப்பனக் குடும்பங்களுக்கு பொன்னையும், பொருளையும், நிலத்தையும் கொடுக்க வேண்டும் என்று ஒரு மாற்றுவழி கூறினார். சிவாஜி அதை ஏற்றுக் கொண்டு காகப்பட்டர் கூறியதைச் செய்து கொடுத்தார். அந்தக் காலத்தில் அதற்காக அவர் செலவழித்த தொகை 7 கோடி ரூபாய்களாகும். 1674 இல் 7 கோடி ரூபாய் என்றால் 2020 ல் கணக்குப் போட்டுப் பாருங்கள். 370 கோட்டைகளை வென்ற மாபெரும் வீரராக இருந்தாலும் - பெரும் நிலப்பரப்பை ஆள்பவராக இருந்தாலும் முடிசூட்டிக்கொள்வது என்ற சடங்கிற்காக அரசாங்கத்தின் ஒட்டுமொத்தக் கருவூலத்தையும் பார்ப்பனர்களுக்குக் கொட்டிக் கொடுத்து - பார்ப்பனர்களின் அங்கீகாரத்தைப் பெறத் துடித்தார். அதுதான் அன்றைய சமுதாய நிலை. ஆனால், அப்படி மன்னராகப் பதவியேற்றதில் பார்ப்பனர்கள் நடந்துகொண்ட மனுசாஸ்திர அணுகுமுறை மன்னர் சிவாஜியைப் பார்ப்பன எதிர்ப்பாளராக மாற்றியது.

மேலும், 'மராத்திய அரசர் சிவாஜியின் பல்வேறு வெற்றிகளில் மஹர் சமூகத்தினர் இன்றியமையாத அங்கமாக இருந்து வந்தனர். ஔரங்கசீப்பால் கொல்லப்பட்ட மராத்தா அரசர் சாம்பாஜியின் உடலை மஹர் சமூகத்தினர் மீட்டு வந்ததை மக்கள் மறந்து விட்டனர். பேஷ்வா படைகளுடன் சேர்ந்து பானிபட் மற்றும் கர்நாடகா உள்ளிட்ட இடங்களில் ஔரங்கசீப்பிற்கு எதிரான போர்களில் மஹர் சமூகத்தினர் பங்கேற்றனர். ஆனால் வரலாறு பெரும்பாலும் பார்ப்பனர்களின் கண்ணோட்டத்தில் எழுதப்படுவதால் உண்மைகளில் குழப்பம் நேர்ந்து விடுகிறது' என்று BKRSS அமைப்பின் துணைத்தலைவரான கட்லக் கூறுவதையும் இங்கு நினைத்துப் பார்க்க வேண்டியுள்ளது. ஏனெனில் வரலாறு என்றுமே பார்ப்பனர்களின் கண்ணோட்டத்தில் எழுதப்பட்டதால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கென ஒதுக்கப்பட்ட பக்கங்கள் பூஜ்ஜியம் தான். சிவாஜியின் காலத்திற்கு பிறகு ஆட்சியைப் பற்றிய பேஷ்வாக்கள் எனப்படும் சித்பவன பார்ப்பனர்கள் தமது ஆட்சியில் வருணாசிரம கொடுங்கோன்மையை உறுதிப்படுத்தினர்.

200 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 1818 ஆம் ஆண்டு பீமா கோரேகான் நதிக்கரையில் (மகராஷ்டிரா) பேஷ்வாக்களின் (20ஆயிரத்துக்கு மேற்பட்ட வீரர்கள் கொண்ட) படையை (மெட்ராஸ் ரெஜிமென்டலில் இருந்து வந்த 800 பேர் கொண்ட) மஹர் சமூகத்தினரின் சிறுபடை தோற்கடித்து. இந்த யுத்தத்தோடு பேஷ்வா ஆட்சி முடிவுக்கு வந்தது. அந்தப் போர் உண்மையில் ஆங்கிலேயருக்கும் பேஷ்வாக்களுக்கும்

*இடையில் நடைபெற்றாலும் ஆங்கிலேயர் படையில் இடம் பெற்றிருந்த மஹர் சமூகத்தினர் தங்களுடைய சமூகத்தின் விடுதலைக்கான அடையாளமாக அதைக் கருதினர். போரின் வெற்றியைக் குறிக்கும் அடையாளமாக அந்த இடத்தில் ஆங்கிலேயர்களால் 65 அடி உயரத்தில் நினைவுத்தூண் ஒன்று எழுப்பப்பட்டது. அந்த* வெற்றியில் மஹர் பழங்குடியின மக்களுக்கும் பெரும்பங்கு இருந்தது. எனவே *1927 இல் மாமேதை அம்பேத்கர் கோரேகான் நிகழ்வில் கலந்துகொண்ட பின், அடுத்தடுத்த* ஆண்டுகளில் லட்சக்கணக்கான மக்கள் கூடி மஹர் பழங்குடியின மக்களின் வெற்றியைக் கொண்டாடுவது என்பது நிகழ்வாக மாறியது. *'பேஷ்வாக்களின் ஆட்சியுடன் தமது பார்ப்பன சாம்ராஜ்ஜியம் பறிபோனதாலேயே சித்பவன பார்ப்பனர்கள் காங்கிரசிலும், ஆர்.எஸ்.எஸ் – இந்து மகா சபாவிலும் சேர்ந்தார்கள். இதன் காரணம் தேசபக்தி அல்ல. இழந்து போன பார்ப்பன சாம்ராஜ்ஜியத்தை மீட்பதே. ஆனால் ஆங்கிலேயர்களுடன் சேர்ந்து பேஷ்வாக்களை எதிர்க்க மஹர்களின் நோக்கம் தமது அடிமைத்தனத்தை ஒழிப்பதே என்பது குறிப்பிடத்தக்கது'.*

மேலும், இது போன்ற சூழல் தெற்கில் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உருவான பிற்கால சோழர் பேரரசிலும் நிலவியுள்ளது கவனிக்கத்தக்கது. *தமிழக வரலாற்றில் மிகப்பெரிய பேரரசாக உருபெற்றிருந்த ராஜராஜன், ராஜேந்திரன் என்ற* பெரும் பெயர்களோடு தொடர்புடைய அந்த வரலாற்றில் தான் *சத்ரியன், இருபிறப்பாளன், ராஜராஜ என்ற அடைமொழிகள் சோழ மன்னர்களுடன் வந்து புதிதாக இணைந்தன.* மேலும் அங்கிருந்துதான் *பிராமணர்களைத் தங்களுடைய அரச குருக்களாக ஏற்றுக்கொள்ளுதல். சமூகத்தின் மன்னருக்கு* மேலானவர்களாக *அவர்களுக்கு அங்கிகாரமளித்தல். அவர்களுக்கென்று தனியாக இருப்பிடங்கள் உருவாக்குதல். பிராமணர்கள் செய்த தவறுகளுக்கு குறைந்த அளவிலான தண்டனை வழங்குதல் அல்லது தண்டனை என்பது இல்லாமல் செய்தல் என்பது போன்ற தனித்துவமான அடையாளங்கள் உருவானது. அதனால் தங்களுடைய அதிகாரத்தை அவர்கள் தங்களுக்கு கீழானவர்கள் மீது செலுத்த துவங்கியுள்ளனர். குறிப்பாக,* 'வாணிகர் வெள்ளாளர் பிராமணர் போன்ற பிற இனத்தவர்களும் அரசாங்க *அதிகாரிகளும் இடங்கையினர் 98 சாதியினரை துன்புருத்தியுள்ளனர்'.*

*இதனால் சமூகத்தில் வலங்கை - இடங்கை பிரிவினர் அவர்களுக்கு இடையிலான பூசலை மறந்து சில வேளைகளில் மேற்கண்ட மூன்று பிரிவுகளுக்கு எதிராக எதிர்த்து நின்றுள்ளனர். 'வலங்கை இடங்கை குலத்தினர் மேல் விதிக்கப்பட்ட வரிகள் மிக அதிகமாக இருந்தன. அந்தச் சுமையைத் தாங்க முடியாமல் அவர்கள் ஊரை விட்டு ஓட* வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது *(கொறுக்கைக் கல்வெட்டு).*

இந்த இரு வரலாற்று பின்புலங்களும் *(மராட்டிய சிவாஜி x ராஜராஜ சோழன்) உணர்துகின்ற உண்மை கவனிக்க வேண்டிய ஒன்று. அதாவது, ஒன்று உழைக்கும் (தலித்) சமூகத்தை நேரடியாக ஒடுக்குவது மற்றொன்று இன்னொரு சமூகத்தின் மூலமாக உழைக்கும் (தலித்) சமூகத்தை ஒடுக்கி அதன் மூலமாகத் தங்களுடைய* வளமான வாழ்க்கையை நிலைநிறுத்திக் கொள்வது. இவ்வாறு இடத்திற்கு ஏற்ப கொள்கையை வரையறுத்து மிக நேர்த்தியாக, சாதுரியமாக தங்களுடைய உயர்ந்தவர்கள் என்கிற இருப்பை உறுதிபடுத்திவருதற்கு இந்த பண்பாடு, தேசியம்

*எனபன நன்றாகப் பயன்படுகின்றன. இவ்வாறான மோசடிகளுக்கு எதிரான குரல்கள் அவ்வப்போது முன்வைக்கப்பட்டு வருவதும் நடந்துகொடண்டுதான் வந்துகொண்டுள்ளன.*

*குறிப்பாக, வலங்கை - இடங்கை பிரிவினர் தங்களுக்கிடையிலான பிரச்சினையைத் தள்ளிவைத்துவிட்டு ஆதிக்க சக்திகளுக்கு எதிராக ஒன்று திரண்டு போராடியது, தோல்சீலைப் புரட்சி, தீண்டாமை எதிர்ப்புப் போராட்டங்கள், திராவிட இயக்கத்தின் தொடர் செயல்பாடுகள் முதலான நிலைகளில் இதன் தொடர்ச்சியை நாம் பார்க்க முடிகிறது. இவ்வாறு இந்திய நிலப்பரப்பில் வடக்கு தெற்கு என்ற எல்லைகளைக் கடந்து கால இடைவெளிகளைக் கடந்து பார்ப்பனச் சமூகம் தம்முடைய அதிகாரத்தை அடித்தட்டு மக்களை சுரண்டுவதன் மூலமாக தொடர்ந்து நிகழ்த்தி வருவதை நாம் நினைவுக் கொண்டுவருகிறது நாவலில் இடம்பெற்றுள்ள 2018 என்பதுடன் தொடர்புடைய குறிப்புகள்.*

*அம்பேத்கார், பெரியார் போன்ற வலுவான தலைவர் ஒருத்தர் தலித்துக்களுக்கு ஆதரவாக குரல் கொடுப்பதற்கு இல்லாமல் போனச் சூழலில் 2018 இல் (2014 பிஜேபி மராட்டியத்தில் ஆட்சிக்கு வந்த பின்) கோரேகானில் நடத்தபட்ட திட்டமிட்ட கலவரம், துப்பாக்கிசூடு, சமூக செயற்பாட்டார்களைக் கைதுசெய்வது, நினைவுத் தூணைச் சுற்றி எப்போதும் ஆயுதங்களோடு நுற்றுக்கணக்கான மத்திய மாநிலக் காவலர்களை நிற்க வைப்பது ஆகியவை இன்றுவரை தொடர்கின்றன.*

*தலித் மக்கள் தமது வீர வரலாற்றை நினைவுக் கூர்வதை வகுப்புவாதிகளால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அதனால்தான் சுதா பரத்வாஜ், கௌதம் நவ்லாகா, வரவர ராவ், அருண் ஃபெரைரா மற்றும் வெர்னன் கொன்சால்வஸ் ஆகியோர் ஒரே நேரத்தில் வெவ்வேறு பகுதிகளில் கைது செய்தனர். மேலும் இந்த வன்முறை தொடர்பான விசாரணையில், பிற இடது சாரி வழக்கறிஞர்கள் மற்றும் அறிஞர்களின் வீடுகளில் காவல்துறையினர் தேடுதல் வேட்டை நடத்தினர்.*

*இந்த வரலாற்று பின்னணியில் தங்களது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ள துடிக்கும் சக்திகளின் நவீன வடிவங்களை தான் தற்போது நாம் பார்த்து வருகிறோம். இந்த அதிகாரவர்க்கத்தின் தொடர் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் எதிர்ப்புக்குரல் தான் அமர்நாத் என்ற கதாபாத்திரத்தின் உருவாக்கமும் அந்த கதாபாத்தினால் உருவாக்கப்படுகிற ஹிட்லர் என்ற கதாபாத்திரத்தின் நீட்சியும் என நாம் பார்க்க வேண்டி உள்ளது.*

**புனிதப் பண்பாட்டுத் தேசிய உருவாக்க பின்புலத்தில் ஹிட்லர் என்ற சப்தம்**

*ஹிட்லர் என்ற ஜூனியர் அமைச்சனின் அரசியல் பயணம் என்பது ஓவியக் கல்லூரியில் இருந்து தொடங்குவதாக ஏபிசிங் மூலம் அறியமுடிகிறது. என்றாலும் 'ஓவியக் கல்லூரி மாணவர் தலைவனாக வருவான் என்று எதிர்பார்த்த ஒருவனுக்கு என்ன ஆனது என்று யாருக்கும் தெரியாது' (ப.86). அதுபோன்ற ஒரு மர்மம்தான் அவன் இளம்வயதில் ஜூனியர் அமைச்சனாக மாறியதும். 'ஹார்டுவர்ட் என்ற சொல்லால் அறியப்படும் முதலமைச்சர் மாநிலத்தின் முக்கியமான மூன்று சாதிகளில் ஒன்றை*

*பிரதிநிதித்துவப் படுத்துபவர். அண்ணிய பெயரை சூட்டிக்கொண்டு பெயர் தெரியாத கிராமம் ஒன்றிலிருந்து வந்த நீல நிறகண் செம்பட்டை தலை கொண்டவனை திடீரென்று அவர் தன் அமைச்சரவையில் ஜூனியர் அமைச்சராக மிக இளைய வயதில் கலை மற்றும் பண்பாட்டு துறையில் அமர்த்தியது'(ப.87) என்று (அவருடைய படிப்பு வராத இரண்டாம் மகனையும் அவனுடைய மனைவியையும் மிகவும் கோபப்படுத்தியது என்ற பின்புலம் கவனிக்கத்து) மர்மங்கள் நிறைந்ததாக ஒருபுறம் சொல்லப்பட்டு வந்தாலும் நாவலின் இறுதியில் ஷம்பாலா என்று அதிகாரத்தின் மையத்தை அடைவதற்கு இவன் தான் சரியான நபர் என்று முதலமைச்சரால் அடையாளப்படுத்தப்படுவது என்பதில் 'ஹிட்லர்' என்ற பெயரில் பத்து வயது பெயர் தெரியாத ஒரு சிறு கிராமத்தில் பிறந்தவனாக தொடங்கும் ஜூனியர் அமைச்சனின் உண்மை முகம் தோலுரிக்கப்படுகிறது.*

*இந்த பின்னணியில் மீண்டும் நாம் நாவலின் தொடக்கத்தில் இருந்து ஜூனியர் அமைச்சனான ஹிட்லர் என்ற பெயர் கொண்டவனை பார்ப்போம். அப்படி பார்க்கிற பொழுது அவன் ஏழாம் வகுப்பு 'சி' பிரிவு படித்தபோது சிவப்பு சட்டை அணிந்திருந்தான். அவன் பத்து வயதில் குஸ்தி செய்வதில் வல்லவனாக இருந்தான். அவனைப் பற்றி யாராலும் கணிக்க இயலாது. நீல நிற கண்களை கொண்டவன் என்பன போன்ற அந்தக் குறிப்புகள் சமகாலத்து இயங்கியலை மட்டுமே கூறாமல் இறந்தகால இயங்கியலை நோக்கி வாசகனை பின்னோக்கி அழைத்துச் செல்வதாக இருக்கிறது.*

*அதாவது, பண்பாட்டுக் கட்டமைப்பு என்பதன் கடந்தகால, நிகழ்கால என்று இரு காலங்களின் பின்புலத்தோடு கதையின் போக்கு என்பது இணை கோடுகளாக பயணிப்பதை நாம் கவனிக்கலாம்.*

*அப்படிப் பார்க்கிறபோது பிறவி (7) வர்க்கம் (சி), மதம் (சிவப்பு) என்ற புள்ளிகளில் நெடுங்காலமாக மனித மனதோடு பின்னிப் பிணைந்திருக்கிற சமஸ்கிருதப் பண்பாட்டின் உருவாக்கப் பிரதியாக 'ஹிட்லர்' என்ற ஜூனியர் அமைச்சன் இந்த நாவலில் அடையாளப் படுத்தப்படுகிறான். அப்படி நாம் சிந்திக்கின்ற போது, அவன் அந்தப் பண்பாட்டை நிலப்பரப்பு முழுமையிலும் நிலைகொள்ள முயற்சிக்கிறான் என்று சொல்லத் தேவையில்லை.*

*அதாவது, நெடுங்காலமாக புனிதமாகக் கருதக்கூடிய அதன் மீதுதான் தற்போது தேசியம் என்ற ஒன்று கட்டமைக்கப்படுகிறது. அந்தக் கட்டமைப்பின் அடிநாதமாக 'ஹிட்லர்' என்ற ஜூனியர் அமைச்சன் பிரதானப் படுத்தப்படுகிறான். இங்கு வாசகருக்கு ஒரு கேள்வி வரும், 'ஒருவேளை ஜூனியர் அமைச்சனான அந்த ஹிட்லர் அந்த வேலையை செய்யவில்லை என்றால் பிறகு என்ன ஆகும்?' அதற்கு நாவல் மிகத்தெளிவாக மூன்றாவது இட்லராக ஏ. பி. சிங் என்ற ஹிட்லரின் நிழல் அந்த வேலையைச் செய்யும் என்பதாக காவல்துறையில் உயர் அதிகாரியின் குரலாக பதிவு செய்கிறது.*

*அதாவது, புனிதம் என்ற போர்வையில் உள்ள அந்தப் பண்பாட்டின் ஆதிக்க மனநிலை என்பது தேசியம் என்ற பெயரில் அதிதீவிரமாக செயலாற்றிக் கொண்டு இருக்கிறது என்பதை நாவல் சொல்கிறது.*

*சரி, நாவலின் சொல்லாடல் இதோடு நிற்கிறதா என்றால், அங்குதான் வாசகனுக்கு மிகப்பெரிய ட்விஸ்ட் இருக்கிறது. அப்படி கட்டமைக்கப்பட்ட அந்தப் பண்பாடு என்பது உண்மையில் பல பண்பாடுகளின் (புத்த மற்றும் பிராந்திய பண்பாடுகளின்) நகல். ஆனால் அதுதான் உயர்ந்தது என்பதாக நினைத்துக் கொண்டுள்ளது என்பதாக நாவலின் இறுதிப் பகுதி அமைகிறது.*

*அத்துடன், அது பிற பண்பாடுகளின் துணையால் அது உயிர் வாழ்கிறது என்ற மறைக்கப்பட்ட உண்மையையும் கட்டுடைக்கிறது. மேலும், புனிதப்பண்பாடு என்ற அந்த சொல்லாடல் மிகப்பெரிய அபத்தம் என்ற உண்மையையும் சொல்லத் தவறவில்லை.*

*'ரோளி' என்ற முதலமைச்சரின் பேத்தியின் சொல்லுக்கான அர்த்தத்தை தேடும் வேலையில் முதலமைச்சரின் பி.ஏவான ஐயர் தன் அறிய மூலையால் அது சமஸ்கிருதம் என்று கண்டுபிடிப்பதும், நவீன சாமியார் 'ரோளி' என்ற சொல் சமஸ்கிருதமா... என மண்டையை போட்டுக் கொள்வதுமான இந்த இரண்டு குறிப்புகளும் முக்கியமானவை. ஏனெனில் ஹிட்லர் என்ற பெயரோடு நாவலில் அறிமுகமாகும் ஜூனியர் அமைச்சன் இந்த இருவருக்கு மட்டுமே மரியாதை (அச்சம், ஆசை என்று பின்புலத்தில்) கொடுத்தான் என்பதான நாவலின் கதை நகர்வில் இது தெளிவாகிறது.*

*'ஐயரிடம் ரகசியத்தை மறைக்க முடியாது. எப்படியாவது அவர் மோப்பம் பிடித்து விடுவார். அவரிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்' என்று தன்னுடைய நண்பன் ஏபிசிங்கிடம் ஜூனியர் அமைச்சன் சொல்வதும், ஷம்பாலா கல்கியின் அவதாரம் நடக்கும் இடம். நிரந்தரமாக மனித இனத்தை கட்டுப்படுத்தபோவது 'ஷம்பாலா' தான் என்ற பிரசங்கத்தை முன்வைக்கும் நவீன சாமியார் நிரந்தரமாக ஹோட்டலில்தான் தங்குவார். ஆம்லெட் உள்ளிட்டவற்றை லபக் லபக் என்று விளங்குவார் என அடையாளப் படுத்தப்படுகிறார். 'விஷ்ணு புராணத்தில் ஷம்பாலா பற்றி வருகிறது. ஷம்பாலா ஸ்தாபிக்க வேண்டும் என்றால் தூய்மையான இதயம் வேண்டும். 'உங்களிடம் உலகை அடக்கி ஒடுக்கும் குணம் தெரிகிறது' என்று ஜூனியர் அமைச்சனைப் பார்த்து கூறிய சாமியார். முதல்வர் உங்களை நம்புவதாக தெரிகிறது. முதல்வரிடம் வேதகாலத்தில் இருந்த ராக்கெட் செய்யும் தொழில்நுட்பம் பற்றி நாளை விவாதிக்க இருக்கிறேன் என்று' (ப.176) தொடரும் இடங்களும் இதை உறுதிபடுத்துகின்றன.*

*சுருங்கக் கூறின், நவீன சாமியார், ஜூனியர் அமைச்சரின் இணைப்பு என்பதன் இந்தப் பின்னணியில் புனிதப் பண்பாடு என்பதன் உண்மை முகம் குறிக்கப்படுகிறது. 'உன் விதி தான் உன்னை இந்த அளவுக்கு உயர்த்தி இருக்கிறது' என்று நவீன சாமியார் சொல்லும்போது ஜூனியர் அமைச்சன் 'விதியாவது கூதியாவது' என்று சொல்லுவதும், பின்னர் ஷம்பாலாவைப் பற்றி சொல்லுகிற பொழுது,*

‘ஷம்பாலா...’ என்று மனதிற்குள் ரகசியமாக சொல்லிக் கொள்வதும்’ உண்மையில் ஷம்பாலா என்பது தீட்டப்படும் ஓவியம் (அதிகாரம்) என்பதும், ஜூனியர் அமைச்சன் குஸ்த்தி போடுவதையும், ஓவியம் தீட்டுவதையும் தவிர வேறு ஒன்றையும் அறியாதவன் என்பதும், ராக்கெட் விடும் தொழில் நுட்பம் வேதகாலத்தில் இருந்து உள்ளது என்று கதை விடுவதும், அதை நடைமுறைப்படுத்துவதற்கான செயல்களை முதலமைச்சர் ஜூனியர் அமைச்சன் என அதிகார மையங்களின் வழியில் முன்னெடுப்பதான பின்புலத்தில் ஷம்பாலாவைத் தரிசிக்க சென்ற இடத்தில் அடர்ந்த பனி மலையில் தவிர வேறொன்று இல்லை என்பதும், அந்த அந்தப் பனி சூழ்ந்த பகுதியில் குளிரில் நடுங்கி பலர் உயிர் இழந்த நிலையில் நவீன சாமியார் புத்த துறவிகளால் உயிர் காக்கப்பெறுவதும், பனிபடர்ந்த அந்த வெற்று பிரதேசத்தில் ஓவியம் தீட்டுவதும் அப்படி தீட்டப்படும் ‘அந்த ஓவியங்களில் வெளிர் நீல வர்ணம் தானாகவே வந்து சேர்ந்தது. இளம் சிவப்பும் அப்படித்தான்’ என்று நவீன சாமியார் ஜூனியர் அமைச்சரிடம் கூறுவதையும் இணைத்துப் பார்க்க வேண்டியுள்ளது.

இவற்றுடன், ஷம்பாலா என்ற உலகின் அதிகார மையத்தை ‘ஜெர்மனியில் இருந்த அந்த ஹிட்லருக்கு என் ஒன்றுவிட்ட தமையன் அதனை போதிக்கத் தான் போனார். தமையன் தந்திரசாலி. பாரதத்தின் அறிவை ஒரு ஐரோப்பியனான முதல் ஹிட்லருக்குக் கொடுக்காமல் ஏமாற்றி விட்டதால், நான் இதோ என் முன் நிற்கிற இரண்டாம் ஹிட்லருக்கு ஷம்பாலா வின் அத்தனை ரகசியங்களையும் கற்பிப்பேன். வா வா.. தயங்காதே’ என்றபோது அவர் காலில் சாஷ்டாங்கமாய் விழுந்தான், ஜூனியர் அமைச்சரான இரண்டாம் ஹிட்லர்’ தன்னுடைய படிப்பில்லாத மகனுக்கு அமைச்சர் பதவியை கொடுக்க மறுத்த விக் தலையனான ஹார்வர்ட் என்ற சொல்லால் சுருக்கமாக அழைக்கப்படும் முதலமைச்சன் பள்ளியிலும் கல்லூரியிலும் படிப்பை பாதியில் விட்ட குஸ்தி, ஓவியம் வரைதல் என்ற இரண்டையும் மட்டுமே 36 வயது இளைஞன் என்ற பின்னணியில் ஜூனியர் அமைச்சனாக அதுவும் கலை பண்பாட்டுத்துறையின் அமைச்சனாக தேர்ந்தெடுத்தான் என்ற பின்னணியில் சொல்லப்பட்டாலும், மறுபுறம் கோடு, வண்ணம், வடிவம் பற்றிய அறிவுதான் அவனை ஓவியப் பள்ளியில் சேர்த்தது என்றும், குஸ்தி என்ற அடையாளத்தின் பின்புலத்தில் உடும்பு (உறுதி) என்ற விலங்கும், அரசியல் சிறுவயதில் தொடங்கிய ஓட்டம் அரசியல் தளத்திலும் செயல்படுகிறது என்ற பின்புலத்தில் பதுங்கிப் பாயும் ‘புலி’ என்ற விலங்கின் இயல்பும், ஹிட் என்றும் ஜூனியர் அமைச்சன் என்றும் அழைக்கப்படும் ஹிட்லரின் வாழ்வின் அத்தனை சம்பவங்களும் ஓவியக் கல்லூரியிலிருந்து தான் துவங்குகிறது. ‘கண்டம் விட்டு கண்டம் தாண்டி எல்லா மிருகங்களும் காணப்பட்டன என்பது போல் எல்லா சம்பவங்களும் ஓவியக்கல்லூரி என்ற இடத்தில் நடந்தன’(ப.143) என்பதன் பின்னணியில் சிங்கம், ஹிப்போபொட்டாஸ் என்ற விலங்குகள் குறிக்கப்படுவதும் கவனிக்கப்பட வேண்டியவை.

இந்த பின்புலத்தில் அசாம் மாநிலத்தின் ஒரு கிராமத்தில் தலித் குடும்பத்தில் இருந்துவந்த போலீஸ் உயர் அதிகாரிகு ஹிட்லர் பின்புலத்தோடு துன்பம் கொடுக்கப்படுவதும். அந்த அதிகாரி கலவரத்தை தடுத்த பின்புலத்தில் நடைபெற்ற மதம் மற்றும் ஜாதிய (மத கலவரத்தை அடக்க காரணமான முஸ்லிம்கள்

*என்கவுண்டரில் கொல்லப்படுவது, காவல்துறை உயர் அதிகாரியாக இருந்தலும் தன் சொந்த கிராமத்தில் செருப்பு காலுடன் நடக்க முடியாது) பின்புல அதிகார வன்முறையின் (பழிவாங்குதல் (ராம்குமார், ஸ்ரீதர்) அரசியல் எதிரிகளை (எதிர்க்கட்சி) இல்லாமல் செய்வது என்பதோடு நிற்காமல், சாதூர்யமாக ஜூனியர் அமைச்சன் ஆனது) வெளிப்பாடுகளும் இணைத்துப் பார்க்க முதலமைச்சரின் சுய முகம் தெளிவாகும்.*

*எதையும் தன்னுடைய சாதுரியமான அறிவால் உண்மை என்று நிலைநாட்டும் இயல்பு கொண்டவனாக ஹிட்லரால் சுட்டப்படும், சொகுசாக வாழ வழி ஏற்படுத்திக் கொள்ளும் இயல்புடைய ஐயர், குழந்தையின் வாயிலிருந்து வந்த கெட்ட வார்த்தையின் பாதி சொல்லை 'அது சமஸ்கிருதச் சொல் என்று தன் அரிய மூளையால் கண்டு பிடித்து' (ப.209) விடுவதும், குழந்தை சொல்லியது சமஸ்கிருதமா... என்று மண்டையைப் போட்டு குழப்பிக் கொள்ளும் நவீன சாமியார் சொகுசான வாழ்க்கை வாழும் பின்னணியில் வேதகால ராக்கெட் தொழில்நுட்பத்தைப் பற்றி நன்கு அறிந்து இருந்ததாக சுட்டப்படுவதும், சமஸ்கிருத சடங்குகளை சரியாக செய்பவராக அடையாளப்படுத்தப்படுவதும் என்கிற இந்தப் புள்ளிகளில்தான் முதலமைச்சர், ஜூனியர் அமைச்சன், நவீன சாமியார், ஐயர் என்ற என்கிற இந்த கூட்டணி இணைகிறது. இந்தக் கூட்டணியின் நோக்கம் அதிகாரத்தை முற்றிலுமாக தங்களிடம் வைத்துக் கொள்வது என்ற பின்புலத்தில் தான் ஷம்பாலா நாவல் கட்டமைக்கப்பட்டுள்ளது. அதாவது, ஹிட்லர் என்ற சப்தம் கதையாகிறது. அதுவும் அமர்நாத் என்ற அறிவுஜீவியின் கற்பனையில்.*

**புனிதப் பண்பாட்டுத் தேசிய உருவாக்கமும் அதன் பரிமாணமும்**

*ரகசியத்தைக் காப்பது. எதிர்ப்புகளை இல்லாமல் செய்வது. இதுதான் மையம். இந்த மையத்தில் இருந்ததான் கண்காணிப்பு அரசியல் துவங்குகிறது. அறிவுஜீவிகள் கண்காணிக்கப் படுகிறார்கள். ஒரு பதட்டம். ஒரு அச்சம். நடக்காத ஒன்றை நடந்தது போல நம்ப செய்தல் என நீளும் உளவியல் மன அழுத்தத்திற்கு இன்றைய சமூகம் தள்ளப்பட்டிருக்கிறது. மக்களைப் பதட்டத்தோடு வைத்துக் கொண்டிருப்பது. எதற்கெடுத்தாலும் நாட்டுப்பற்று என்று முழக்கமிடுவது. எதிர்ப்பாளர்கள் மீது தேசப்பற்று இல்லாதவர்கள் என்று முத்திரை குத்துவது என்பதாக நீளும் அதிகாரவர்க்கத்தின் கட்டவிழும் அடக்குமுறை யாரையும் விட்டு வைக்கவில்லை. அதனுடைய உச்சம்தான் பெட்ரோல் விலை எவ்வளவு உயர்ந்தாலும் அல்லது பேருந்து கட்டணம் எவ்வளவு உயர்ந்தாலும் எந்தவித எதிர்ப்புமின்றி இந்த சமூகம் மௌனமாக அவற்றைக் கடந்து சென்று கொண்டிருக்கிறது. அந்த அச்ச உணர்வின் வடிவமாக சித்தரிக்க கூடிய கதாபாத்திரம் தான் அமர்நாத். இரண்டு காவலர்கள் தன் வீட்டிற்கு வருவதை கண்ட 'அமர்நாத் சற்று பயந்தார். வரலாமா என்று கேட்டவர்களிடம் அவசரமாக வாருங்கள் என்றார். என்ன விஷயம்?' என் குழந்தை இப்போதுதான் வீட்டிலிருந்து பள்ளிக்கு புறப்பட்டால் என்றார் பதட்டத்துடன்'(ப.1). இப்படி தான் இந்த நாவலின் துவக்கம் அமைகிறது.*

இது சமகாலத்து அரசியலில் தொடர் நிகழ்வுகளைக் கண்ட ஒரு சராசரி மனிதனின் உள்ளத்து உணர்ச்சியின் வெளிப்பாடாக அமைந்திருப்பதை நாம் நன்கு உணரலாம். தொடர்ந்து காவி நிற கூட்டத்தில் வன்முறைக்கு இறையாகி கொண்டுள்ள மக்களின் துயரங்கள் தந்த அனுபவப் பாடத்தின் வெளிப்பாடுதான் அவருடைய அந்தப் பதட்டத்திற்கும் தன் மகளைப் பற்றிய தொடர் நினைவுகளுக்கும் காரணம் என்பதை நாம் மேலும் விளக்க வேண்டிய அவசியமில்லை.

இது இவ்வாறு இருக்க, மறுபுறம் தன்னை தேடி வந்த காவலர்களிடம் 'டெல்லி' என்ற ஒரு பெயரை சொல்லிய பொழுது அவரை தீவிரவாதிகளோடு தொடர்பு கொண்டவராக பழி சுமத்துவதும் கவனிக்கத்தக்க அம்சமாகும்.

அவருடைய ரகசியத்தை ஆராய்வதுதான் தங்களுடைய நோக்கம் என்று வரும் சிந்தனை போலீசார் அவர் கழிவறை செல்வது என்பது அதோடு தொடர்புடைய விஷயங்களையும் நாம் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டியவை. இவை எந்த அளவிற்கு தனி மனிதனுடைய அந்தரங்கம்வரை இன்றைய ஆட்சியாளர்கள் மூக்கை நுழைக்கும் செயல்பாடு இருக்கிறது என்பதை அப்பட்டமாக காட்டுகின்றன.

அமர்நாத்தைத் தேடி இரண்டு வகையான காவலர்கள் வருகிறார்கள் முதலில் சாதாரண கீழ் நிலையில் இருக்கக்கூடிய காவலர்கள். பிறகு அவர்களுக்கு மேலதிகாரிகளான இரண்டாம் நிலை காவலர்கள் வருகிறார்கள். இந்த இரண்டு நிலை காவலர்களுக்கு இடையில் அணுகுமுறையில் நிறைய வேறுபாடுகள் இருப்பதை பார்க்க முடிகிறது. என்றாலும் அவர்களுடைய நோக்கத்தில் அவர்கள் மிகத் தெளிவாக இருக்கிறார். படிநிலை, அணுகுமுறை எனச் சில முரண்பாடுகள் அவர்களிடம் வெளிப்பட்டாலும், அவர்களின் செயல்பாடு கண்காணிப்பது என்பதில் எவ்வித சமரசமும் செய்துகொள்ளாமல், அதிகார மட்டத்தில் கொடுக்கப்படுகிற வேலையை மிக கச்சிதமாக செய்து முடிக்கும் கருவிகளாக டிசைன் செய்யப்பட்டிருக்கிறார்கள். இதுவும் ஒருவித ஏபிசிடி வடிவில் இருப்பதாகவே தோன்றுகிறது. முதலில் வருகிற நபர்கள் சாதாரண காவலர்களாக இருக்க இரண்டாவதாக வரக்கூடியவர்கள் அமர்நாத் நண்பனின் மகனாக அமெரிக்காவில் கிரிமினாலஜி படித்தவர், ஸ்பானிஷ் மொழி தெரிந்தவர் அமர்நாத் தன்னுடைய புத்தகங்களை வாசிக்க கூடியவர் என்ற பின்னணியில் வரும் அவர் '...இப்போது இந்த அரசாங்கம் எல்லோரிடமும் மதவாத சிந்தனையை பரப்ப விரும்புகிறது. பெரிய அளவில் வெற்றி பெற்று வருகிறது. எப்படி? எதிர்க்கட்சித் தலைவர் தன் கோத்திரம் பற்றி பேசுகிறார். தானும் கோயில் கோயிலாக ஏறுகிறார். இது அரசியல் சட்டத்துக்கு எதிராக மக்களை மதப்போதைக்கு ஆளாக்குகிறது. எதிர்க்கட்சியும் அந்த போட்டியில் தோற்றுப் போக விரும்பவில்லை. ஐம்பது வருடங்களுக்கு முன்பு இந்த நிலைமை இல்லை.....' (ப.155) என பல்வேறு விஷயங்களைப் பேசுகிறார், அமர்நாத் அதோடு சேர்ந்து வெளியில் சென்று டீ குடிக்கிறாரார். நண்பர்கள் போல் பழகும் அவர்களிடம் 'தன் அன்பு மகள் அமரியை தான் தினந்தினம் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அவளைக் காணவில்லை என்று எங்கிருந்தோ ஒரு குரல் கேட்பது இப்படி நண்பர்கள் போல் அமர்ந்து பேசி காப்பி அருந்த கிளம்பி உள்ளவர்களிடம்' (ப.163) சொல்லாமா? என்றும் கூட யோசிக்கிறார். அப்படி நினைத்த அவர் அவர்களுடைய உண்மையான முகத்தை முழுமையாக

தெரிந்த பிறகு 'பிறரை அடிமைப்படுத்த அறிவைப் பயன்படுத்தும் அறிவுத்துறை வணிகர்கள் இவர்கள்' (ப.164) என்று நினைக்கிறார். அதனால் 'தன் நண்பரின் மகன் என்று கூட அந்த ஒல்லியான அதிகாரி மீது வாஞ்சை தோன்றவில்லை'(ப.164) அவருக்கு (அமர்நாத்) என்பதும், தன்னுடைய (ரகசிய போலிஸ்) நோக்கம் அமர்நாத் போன்றவர்களைக் கண்காணிப்பது தான். அதற்காகத்தான் இந்த அரசாங்கம் அதிகப்படியாக செலவு செய்கிறது. கண்காணிப்பது என்பது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது என்பது போன்ற கருத்துக்களும், அமர்நாத் - நண்பரின் மகனான ரகசிய போலிஸ் உரையடலில் வெளிப்படுத்தப்படும், வரலாறு, தத்துவம், பண்பாடு, அரசியல் பற்றித் தெரிந்த உயர் சிந்தனையாளர்களை நீக்கிவிட்டு அரசின் சிந்தனைகளை ஏற்பவர்களை நியமிப்பது. ஒரு சட்ட புத்தகம் இரு விதமான தீர்ப்புகளை தருவது. அதாவது, தாம் வழங்க விரும்பும் தீர்ப்பைச் சட்டப்படி சரி என்று நம்ப வைப்பது. பொய்யை மெய்யென்று பெரிய அளவில் மக்களிடம் வேகமாக பரப்புவது. எமர்ஜென்ஸி காலத்தைப் போல் (எழுத்தாளர்கள் நள்ளிரவில் கைது செய்யப்பட்டனர்) இல்லாமல், வெகு நுட்பமாக மூளை, மொழி, எழுத்து, கவிதை போன்றவற்றில் உள்நுழைந்து சிந்தனையாளர்களைத் தொடர்ந்து கண்காணிப்பது (பக்.155-164) என்பன போன்றனவும் கவனிக்கத்தக்கன.

மக்களின் தேவைகளுக்காக குரல் எழுப்புபவர்களின் (தனி மனித உரிமைகள் வரை) கண்காணிக்கப்படுகிறது. இதுதான் இன்றைய ஆட்சியாளர்களின் முக்கியமான பணி. ரகசிய போலீஸ் முதன்மையான பணி என்பது மக்களுக்கு எதிராக குரல் கொடுப்பவர்களை கண்காணிப்பது என்பதாக மாறி இருப்பதும், அதற்காகத்தான் அவர்களுக்கு அரசாங்கப் பதவி வழங்கப்படுவதும், அவர்களுக்கு மக்களின் வரிப்பணத்திலிருந்து ஊதியம் கொடுக்கப்படுவதும், நிகழ்கிறது என்பதான இன்றைய அரசாங்கத்தின் செயல்பாட்டை மேற்கண்டவை அடையாளப்படுத்துகின்றன.

ராபர்ட் என்னும் இளைஞன் கிறிஸ்துவ மதத்தில் இருந்து பெரும்பான்மை சமூகமாக கருதக்கூடிய இந்து மதத்தில் இணைகிறான். அவனது அந்த முடிவு. இன்றைய சமகால அரசியலை அம்பலப்படுத்துவதாக இருக்கிறது. 'ராபர்ட் உழைப்பாளர் கூட்டத்தில் அல்லது அவர்களின் கட்சிகளில் சேராமல் அவனைப் போல் படிப்பு வராதவர்கள் இருக்கும் இயக்கத்தில் சேர்ந்து இருப்பது பற்றி சிந்தித்தார். இது ஒரு புது உண்மை என்று அறிந்தார். அறிவு மற்றும் உழைப்பு என்ற பிரிவினையில் உழைப்பின் பக்கம் போய் சேர்ந்து இருக்கிறான் ராபர்ட். அறிவு என்று தன்னைப் போன்றவர்கள் இதுவரை தேடி அலைந்தது உண்மையில் ஒரு கானல் நீரோ என்று பட்டது. அவர் அதனை ஏற்காவிட்டாலும் வேறு ஒரு உண்மை அவருக்குத் தெரிந்தது. அது ஏன் வலதுசாரி கூட்டத்தினர் என்று உலகமெங்கும் வெற்றி பெறுகிறார்கள் என்பதற்கான அர்த்தம் இதுவரை பதில் கிடைக்கவில்லை' (பக்.189,190) இதுதான் இன்றைய அதிகார வர்க்கத்தின் வெற்றியின் ரகசியம் ஆகும். ஒருபுறம் முஸ்லிம் சமூகம் இந்த பெரும்பான்மை சமூகத்திற்கு வாக்கு அளிக்கிறது. மறுபுறம் ஒரு கிறுத்தவ இளைஞன் இந்த கூட்டத்தில் சென்று இணைகிறான். இதுதான் இன்றைய நிலை. இதற்கான காரணம் அதிகாரத்தை நோக்கி செல்வது. அந்த அதிகாரத்தில் தங்களுக்கும் எப்படியாவது கொஞ்சம் பங்கு கிடைத்துவிடாதா? என்ற சுயநலத்தைத் தவிர வேறு என்ன இருக்கமுடியும்.

*ராபர்ட் என்ற இளைஞன் விநாயக் என்பவனாக (மடாதிபதியின் தம்பிக்காக ஜெயிலுக்கு அனுப்புதல்) மாற்றப்படாமல் இருந்திருந்தால் அவன் ஒரு ஹிட்லராக மாறியிருக்க மாட்டான் என்று என்ன உறுதியிருக்கிறது. அவ்வாறில்லாமல் அவன் (ராபர்ட்) விநாயக்காக மாற்றப்பட்டதால் புனிதத்தின் மீது கட்டப்பட்ட தேசியத்தில் இருந்து விலகி, கல்விப்புலம் சார்ந்த தன்னுடைய பாதையைத் திருப்பிக் கொள்கிறான். இந்தப் பின்னணியில் சமண சமயத்தின் பங்கு இருப்பதும் இணைத்து பார்க்க வேண்டிய ஒன்று.*

*மேலும், 'பள்ளியில் படிப்பது என்று ஏதோ புத்தகத்தை திணித்தார்கள் விளையாட சொல்லவில்லை தோட்ட வேலை செய்ய வேண்டும் என்று வாரத்தில் ஒரு பீரியடை ஒதுக்கினார்கள் எனக்கு மிகவும் பிடித்துப் போனது அந்த பீரியட் தோட்டம் போட்டோம் செடிகளுக்கு உரம் தயாரித்து நீர் வளர்த்தோம்...'(ப.190) என்ற அவனுடைய கூற்றும், அமரியின் பள்ளியில் காவி ஆடை ஆசாமி அறம் போதிப்பதுமான நிகழ்வுகள் இன்றைய கல்வி முறை உற்பத்தி பொருளாக (இயந்திரத்தனமாக) மாறிக் கொண்டிருப்பதை அடையாளம் காட்டுகின்றன. மேலும், 'நாட்டுப்பற்று இல்லாவிட்டால் நாம் எப்படி முன்னேற முடியும்..... அதனால் தான் எங்கள் பல்கலைக்கழகத்தின் வாசலில் ஒரு பழைய டாங்கியை எல்லோர் பார்வையிலும் படும்படி கட்டி தொங்க விடப்படும் படி திட்டமிட்டுள்ளேன்' என்ற கல்விப் புலத்தின் பின்புலத்திலிருந்து நாட்டுப்பற்று மூலம் சமூகத்தின் மேம்பாட்டை நிலைநிறுத்த முடியும் என்ற கருத்தியலை பரப்பும் செயலையும் நாம் இணைப் பார்க்க வேண்டியுள்ளது.*

*நாம் இந்துக்களாக ஒன்றிணைய வேண்டும் என்று புனிதத்தை தேசப்பற்று என்பதோடு இணைத்து மக்களைப் பதட்டத்தில் வைத்திருப்பதற்காக கலவரங்கள் உருவாக்கப்படுகின்றன. ஒருவேளை திட்டமிட்டு உருவாக்கப்படும் கலவரங்கள் தடுக்கப்பட்டால் கலவரத்தை நேர்மையாக தடுக்கும் காவல்துறையினர் மீது வீண் பழி சுமத்தப்படுகிறது (லஷ்மண்). தடுப்பதற்குக் காரணமான நபர்கள் கொல்லப்படுகிறார்கள் (முஸ்லீம் பெரியவர்கள்). அவர்கள் மீது கலவரத்தை தூண்டியவர்கள் என்ற பழி சுமத்தப்படுகிறது. இது ஒரு மாதிரி.*

*இன்னொரு மாதிரி. நடக்காத ஒன்றை நடந்ததாக சித்தரிப்பது. ஒரு இளைஞன் இறந்து விட்டான் என்று வதந்தியைப் பரப்புவது. அவன் இறந்ததாகச் சொல்லப்பட்ட இளைஞன் பிறகு உண்மையில் கொல்லப்படுவது. கொல்லப்பட்ட இளைஞன் முஸ்லிமாக இருந்தாலும் அவன் இந்து என்று தன்னுடைய அதிகார பலத்தால் சாதாரண மக்களை நம்ப (ராம்நாத்) வைப்பது. அதை வைத்து இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் பிளவை உண்டாக்கி மதக்கலவரத்தை தூண்டுவது. அதில் தங்களுடைய தேசப்பற்றைப் கொண்டுவந்து இணைப்பது.*

*இப்படி பல மாதிரிகளில் தேசப்பற்று மதம் புனிதம் என்று மாயாஜால சொற்களை வைத்துக்கொண்டு இன்றைய அரசியல் தளம் இயங்கிக் இயங்கிக் கொண்டிருக்கிறது.*

*சுருங்கச் சொன்னால் என்ற பேஷ்வாக்கள் என்ற பிராமணர்களின் (உயர் சமூகமும்) வாரிசுகள் இன்று வலதுசாரி இடதுசாரி அல்லது ஆளும் கட்சி எதிர்கட்சி என்ற இடைவெளிகள் ஏதுமில்லாமல் தேசிய அளவிலான கட்சிகளில் முக்கியமான அங்கத்தினர்களாக இருப்பதுதான் இன்றைய புனிதப் பண்பாட்டுத் தேசிய (இந்துப் பாசிச) உருவாக்கத்தின் அடித்தளம் என்பதை நாம் மறுக்க இயலாது.*

*69 விழுக்காடு இட ஒதுக்கீட்டுக்கு எதிராக காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் நீதிமன்றத்தில் வாதிடுவதும், நீட் தேர்வுக்கு தமிழகத்திற்கு விதிவிலக்கு அளிக்க கூடாது என்று அதே காங்கிரஸ் பேரியக்கத்தின் முக்கியமான தலைவரின் மனைவி வாதிடுவதும், உயர் பிரிவை சேர்ந்தவர்களுக்கு 10.5% இட ஒதுக்கீடு சட்டம் கொண்டு வந்த போது அதை காங்கிரஸ் இடதுசாரி கட்சிகள் ஓடோடி சென்று ஆதரவு அளித்ததையும் சாதாரண விஷயமாக கருதி கடந்து செல்ல இயலாது.*

*இதுவரை முழுமையான அதிகாரம் கிடைக்காமல் (தங்களது கொள்கையை நிறைவேற்றும் தலைமை - பிராந்திய கட்சிகளின் ஆதரவில் அதிகாரத்தை கையில் வைத்திருந்தது) இருந்தவர்கள் இன்று தங்களுடைய பலத்தை முழுமையாக பெற்றதன் மூலம் உண்மை முகத்தை காட்ட ஆரம்பித்திருக்கிறார்கள்.*

**பாசிசம் – இந்துப் பாசிசம் என்றழைக்கப்படும் புணிதப் பண்பாட்டு தேசியம்**

*உரோம இனவெறி என்ற சொல்லாடலின் மேல் கட்டப்பட்ட தேசிய வாதம் பாசிசம் என அழைக்கப்படுகிறார். பழங்கால ரோமானியத்தில் பயன்படுத்தப்பட்ட குறியீடான ஒரு கோடாரி மற்றும் இரும்பு குழாய்கள் `பாசஸ்` என்று குறிப்பிடப்பட்டது. அது முசோலினியின் பாசிஸ்ட்டுகளாக அடையாளப்படுத்தப்பட்ட ஒரு குறியீடு. இந்த பின்புலத்தோடு கூடிய பாசிசம் என்ற சொல் உலக வரலாற்றில் முதல் உலகப் போருக்குப் பிறகு பரவலாக அறியப்பட்ட ஒன்றாக உள்ளது. அது இத்தாலியில் முசோலினி மூலமாகவும் ஜெர்மனியில் ஹிட்லர் (நாசிசம்) மூலமாகவும் உலகம் முழுவதும் அது அடையாளப்படுத்துகிறது. சற்று ஏறக்குறைய 100 ஆண்டுகளுக்கு முன்பு இத்தாலி ஜெர்மன் ஆகிய நாடுகளின் பின்புலத்திலிருந்து பரவலாக பேசப்பட்டிருந்தாலும், அந்தச் சொல்லின் பொருளைக் குறித்த விவாதங்கள் இன்றும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது.*

*'பாசிசம் என்பது நிதி மூலத்தின் மிகவும் பிற்போக்கான மிகவும் இனவெறி கொண்ட மிக மோசமான ஏகாதிபத்தியவாதிகளின் அப்பட்டமான பயங்கரவாத சர்வாதிகாரம் ஆகும்' என கம்யூனிஸ்ட் அகிலத்தின் விரிவான நிர்வாகக் குழுவின் மூன்றாவது கூட்டத்தில் கொடுக்கப்பட்ட விளக்கமாக்ம. இந்த விளக்கம் உள்ளிட்ட இதற்கு பிறகான பாசிசம் குறித்த பல்வேறு வரையறைகள் அந்த வரையறைகளில் உள்ள சிக்கல்களை நுட்பமாக அணுகிய பால்மிரோ டோக்ளியாட்டி, (1935 ஆம் ஆண்டில் மாஸ்கோவில் உள்ள லெனின் பள்ளியில் 15 தலைப்புகளில் விரிவாக நடத்தப்பட்டுள்ளது) 'இத்தாலிக்கு எது பொருந்துமோ அது இதர ஒவ்வொரு நாட்டிற்கும் பொருந்தும் என்றும் பொருந்த வேண்டும் என்று நினைக்காதீர்கள். பாசிமானது வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு வடிவங்களை எடுக்கும். வெவ்வேறு*

*நாடுகளில் வெகுஜன பகுதியினர் வடிவங்களிலான அமைப்பைக் கொண்டிருக்கின்றன. அத்துடன் எந்த காலகட்டத்தை குறித்து நாம் பேசுகிறோம் என்பதையும் நாம் நினைவில் கொண்டிருக்க வேண்டும். பாசிசமானது ஒரே நாட்டில் வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு நோக்குகளை, கோணங்களை மேற்கொள்கிறது (பால்மிரோ டோக்ளியாட்டி, ப.21)' என்கிறார்.*

*அதாவது, 'முரண்கள் நிறைந்த உள்ளடக்கத்தோடு தோன்றுவதால் பாசிசத்தின் முகம் ஈர்ப்பு மிக்கதாக விளங்குகிறது. அதிகாரத்துவத்தை வலியுறுத்துகிறது; ஆனால் அதேவேளையில் புரட்சிக்கு மக்களைத்திரட்டுகிறது. ஒருபுறம் சமகால ஜனநாயகத்தை எதிர்க்கிறது; ஆனால் மறுபுறம் எந்த ஒரு கடந்தகால ஆட்சியையும் திரும்பக் கொண்டு வருவதில் நம்பிக்கையற்று இருக்கிறது. வலுவான அரசனாகத் தன்னை காட்டிக் கொள்கிறது. ஆனால் அதனை குலைக்கப் கூடிய வழிகளைப் கடைப்பிடிக்கிறது. அழிவு வேலையில் ஈடுபடும் குழு போலவோ இரகசிய குழு போலவோ செயல்படுகிறது. எந்த கோணத்திலிருந்து அணுகினாலும் அது ஒரே நேரத்தில் ஒன்றாகவும்,மற்ற தாகவும், இதுவாகவும், அதுவாகவும் - தோன்றுகிறது...'(�மோசே ஒர்டேக இ கஸ்ஸே, ஸோபர் எல் பஸிஸ்மோ - 1927)*

*இப்படியாக இதுவாகும் அதுவாகும் ஒன்றாகும் மற்றாகவும் விளங்கும் 'பாசிச தத்துவமானது பல்வேறு கதம்பக் கூறுகளை தன்னுள் கொண்டுள்ளது' என்பதை தெளிவாக அறிந்துகொள்ள முடிகிறது.*

*அதாவது,*

- *சிக்கல்கள் நிறைந்ததான சிந்தனையின் வெளிப்பாடு.*
- *வெறித்தனமான தேசியவாதம், இனவாதம்.*
- *சமூக ஜனநாயகத்தின் ஒத்த தன்மை.*
- *மூடர்களும் அறிவுஜீவிகளும் ஏற்கத்தக்க வகையில் மாய தன்மை கொண்டதாக இருப்பது.*
- *புரட்சிகர பாசிச மனிதனை உருவாக்குவது ( அவன் தேசத்துக்காக வாழும் ஒருவனாக இருப்பான் என்ற தோற்றத்தை ஏற்படுத்துவது)*

*முதலான பல கூறுகள் பாசிசத்தின் உள்ளடக்கங்களாக நாம் ஒருவாறு (என்றாலும் இதுவும் போதாமை என்பது வெளிப்படை பாசிசத்தைப் புரிந்துகொள்ள) புரிந்துகொள்ளலாம்.*

*ஆக, மேலே பார்த்த இத்தாலி ஜெர்மன் நாடுகளில் தேசிய தேசியவாதம் இனவாதம் மதவாதம் என்ற பின்புலங்களில் ஒரு அதிகார கட்டமைப்பு திட்டமிட்டு உருவான வரலாறு நீளுகிறது இத்தகையதொரு வரலாறு இந்திய மரபில் மிக நீண்ட காலமாகவே நடைமுறையில் இருக்கக்கூடிய ஒன்றாகும். அத்துடன், ஜெர்மனி, இத்தாலி போன்ற நாடுகளில் பாசிசத்தின் கரங்கள் தேசியம் என்ற சிந்தனையைப் பிரதானப்படுத்துகிறதுபோது பிற தேசிய இன மக்களை நோக்கியதாக அதனுடைய தாக்குதல்கள் அமைந்திருந்தன. ஆனால், இந்தியாவில் நிலைமை முற்றிலும்*

தலைகீழாக இருக்கிறது. இந்த நிலப்பரப்பில் நீண்ட காலமாக வாழக் கூடிய பூர்வீக இனக்குடிகள் மீதான தாக்குதலாக அது கட்டமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும், பண்பாடு அதுவும் புனிதப்படுத்தப்பட்ட பண்பாடு (மதம், வர்க்கம், மொழி) என்ற அடையாளத்தோடு தன்னுடைய ஆளுமையை நீண்ட காலமாக செலுத்தி வருகிறது அது. அதனுடைய பரிமாணம் என்பது தற்போது புனிதப்படுத்தப்பட்ட தேசியமாக உருமாற்றம் அடைந்துள்ளது. எனவே அந்த நீண்ட வரலாற்றை அதனுடைய பின்புலங்களை அதன் எதிர்வினைகளை குறித்த கதையாடல்களாய் கொண்டுள்ள ஷம்பாலா நாவலை இந்துப் பாசிசம் என்று பொதுவாய் அழைக்கப்படும் புனிதப் பண்பாட்டு தேசியத்தினைத் தோலுரிக்கும் பிரதியாக கொள்ளாலம்.

'ஹிட்லர் என்ற சப்தம் உடலாகிறது என் கற்பனையில். தொடர்கிறது ஒரு கதை ( ப.21)' என்று நாவலில் இடம்பெறும் அமர்நாத் என்ற அறிவு ஜீவியின் கூற்றிலிருந்தும், 'ஓர் அரசியல் நாவல்' இது என்று நாவலாசிரியரால் அடையாளப்படுத்தப்படுத்துதலிருந்தும் தெளிவாக அறிய முடிகிறது.

**முடிவுரை**

அதிகாரம் எப்பொழுதும் சாமானியனுக்கு எதிராகத்தான் மிக வேகமாக செயல்பட்டு வந்திருக்கிறது. குறிப்பாக இந்தியாவில் வரலாற்று காலத்திலிருந்தே பார்ப்பனர்களின் கைப்பாவைகளாக அதிகாரத்தில் இருக்கக்கூடியவர்கள் (மன்னர் உள்ளிட்ட மற்ற உயர் சமூகங்கள்) தொடர்ந்து தங்களுடைய ஆதிக்கச் சிந்தனையைத் திணித்து வருவதை நாம் கவனிக்க முடிகிறது. அதன் உச்சபட்ச தாக்குதல்கள் தான் தற்போது நாம் பார்த்துக்கொண்டிருப்பது. இந்த நீண்ட பின்புலங்களில் தொடர் செயல்பாடுகளுக்கான ஒரு வடிவம்தான் ஷம்பாலா எனும் நாவல் பிரதி உருவாக்கம் என்று உறுதியாகச் சொல்லலாம்.

**துணை நின்ற நூல்கள்**

1. தமிழ் நாட்டு வரலாறு (சோழப் பெருவேந்தர் காலம்), தமிழ் நாட்டு வரலாற்று ஆசிரியர் குழு, 1998 (முதல் பதிப்பு), தமிழ் வளர்ச்சித்துறை, குறளகம், சென்னை – 600 108.
2. பாசிசம் குறித்த விரிவுரைகள், பால்மிரோ டோகக்ளியாட்டி, 2019 ( இரண்டாம் பதிப்பு), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 600 050.
3. பாசிசம் (கெவின் பாஸ் மோர்), ஆ மங்கை ( தமிழில்), 2017 ( மூன்றாம் பதிப்பு), அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம் - 621 310.
4. பீமா கோரேகான், முனைவர் மு.இனியவன், 2019 (முதல் பதிப்பு), அறிவாயுதம் பதிப்பகம், சாஸ்திரி வீதி, எண் 4, கல்லூரிப்புதூர், கோவை - 641 041.
5. பிரதியில் கிளைக்கும் பிம்பங்கள், ஜமாலன், 2018 (முதல் பதிப்பு), காலக்குறி பதிப்பகம், 2, லட்சுமி அம்மன் கோயில், 2வது தெரு, சென்னை - 600 066.
6. ஷம்பாலா, தமிழவன், 2019 (முதல் பதிப்பு) , பாரதி புத்தகாலயம், சென்னை - 6000 18.